


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்த விழாவில், டாடா குழும தலைவர் என். சந்திரசேகரனுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ.வீர ராகவ ராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா குழும தலைவர் என். சந்திரசேகரன், தலைமை செயல் அலுவலர் வாரன் ஹாரிஸ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை - டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் ஐந்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Cards) வழங்கினார். உடன் அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் ஆறு மேல் தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உலக தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் (8.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் ஆறு மேல் தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உலக தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் (8.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் மா.மதிவேந்தன் - எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜூன் 10 -

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள மலைக் காவலர் கோவில் எதிரே மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கம் திறப்பு விழா நடைபெற்றது.

இதில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம். மதுரா செந்தில் தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலை வகித்தார்.

விழாவில் கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கே.என். நேரு கலந்து கொண்டு மாவட்ட அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் திடலில், வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்த பணிகளை மேற்கொள்ள மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் செயல்வீரர்கள் கூட்டம் நடை பெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளையம் வெல்வது எளிது. மாவட்ட செயலாளர்கள் தொண்டர்களிடம் கனிவாகப் பேசி அவர்கள் சொல்வதை காது கொடுத்து கேட்டு கோபப் படாமல் பேசி முடிந்ததை செய்து கொடுத்தால் பாராளுமன்ற தேர்தலில் மகத்தான வெற்றியை பெறலாம். ஆளுநர் செல்லும் இடங்களில் எல்லாம் திமுக அரசை குறை கூறி பேசி வருகிறார். தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதி சரியில்லை என்று கூறிவருகிறார். ஆனால் தமிழகத்தை போல் வட மாநிலங்கள் வளர்ச்சி அடைய இன்னும் 50 ஆண்டுகள் ஆகும் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் டி.எம். செல்வகணபதி, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல், நகர செயலாளர் தா.கார்த்திகேயன் பேரூர் செயலாளர் திருமலை, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ் பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தில் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஜே.கே.எஸ்.மாணிக்கம், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடேசன் நகர் மன்றத் தலைவர்கள் நளினி சுரேஷ்பாபு, த.விஜ ய்கண்ணன், செல்வராஜ், ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் சுஜாதா தங்கவேல், தலைமைக் கழகப் பேச்சாளர் முரசொலி முத்து மற்றும் மாநில, மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் திமுக செயலாளர்கள், சார்பு பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் மற்றும் தி.மு.க. தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக டி.சி.எம்.எஸ் வளாகம் அருகே அமைக்கப்பட்டுள்ள 70 அடி உயரமுள்ள கொடி கம்பத்தில் கழக இரு வண்ணக் கொடியை அமைச்சர் கே.என்.நேரு ஏற்றி வைத்தார்.

### சேந்தமங்கலம் ஒன்றியத்தில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில்

# முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் துவக்க விழா!

## கே.ஆர் என். இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூன் 10 -

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் MGNREGS திட்டத்தின் கீழ் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளரும், அட்மா குழு தலைவருமான அ. அசோக்குமார் முன்னிலை வகித்தார்.

துவக்க விழா நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர் என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உள்ள நடுக்கோம்பை, வாழவந்திக்கோம்பை, கொண்டமநாயக்கன்பட்டி, அக்கியம் பட்டி, பேளுக்குறிச்சி, உத்திரகிடிகாவல், கல்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் MGNREGS திட்டத்தின் கீழ் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் பேரூர் கழக செயலாளர் தனபாலன், காளப்பநாயக்கன்பட்டி பேரூர் கழக செயலாளர் முருகேசன், ஒன்றிய குழு தலைவர் மணிமாலா சின்னுசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர், துணை தலைவர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள சூரிய ஒளி மின்சக்தி மூலம் செயல்படும் நவீன வசதிகளுடன் கூடிய குளிர்சாதன இரண்டடுக்கு பேருந்து நிழற்கூடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி திறந்து வைத்தார்கள்.

### இராம்கோ நிறுவனம் ரூ.4 கோடி; பொன் கெமிக்கல்ஸ் ரூ.25 லட்சம்!

# தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது!

சென்னை, ஜூன் 10 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (08.06.2023) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் ரூபாய் 4 கோடி மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் விளையாட்டுக்கான கட்டமைப்பை மேம்படுத்தி சர்வதேச அளவிலான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்கும் வகையிலும், தேவையான உதவிகளை வழங்கிடும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (Tamil Nadu Champions Foundation) உருவாக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அரசு ஆணை எண்.29 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நாள் 05.05.2023-ன் படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களைதுணைத்தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் இந்த அறக்கட்டளைக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (08.06.2023) சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் பங்களிப்பாக ரூபாய் 4 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் (Pon Pure Chemicals Group) சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை அமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இராம்கோ மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலூர் கி. கோவிந்தராசன்

**ஜூன் 10 (1998)**



**கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.**

**கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.**

**நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.**

**தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, "அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**